**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070

Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170220

## ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவகம் அமெரிக்கா - இலங்கைக்கிடையிலான இணைப்பினை வலுப்படுத்துதல்

**கொழும்பு, 2017 பெப்ரவரி 20**: அமெரிக்கத் தூதரக இல்லத்தின் குழுவிலிருந்து இருதரப்புப் பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பில் நடைபெறும் தூதரக இல்லத்தின் ஜனநாயகக் கூட்டாண்மையின் ஒரு பகுதியாக விளங்கும் மூன்று நாள் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இன்று இலங்கைக்கு வருகின்றது. 2016, செப்ரெம்பர் 14 ஆம் திகதி வாஷிங்டனில் ஐக்கிய அமெரிக்கத் தூதரக இல்லத்தின் பிரதிநிதிகளிற்கும் இலங்கைப் பாராளுமன்றத்தினருக்கும் இடையில் நடைபெற்ற ஒரு கூட்டு ஒப்பந்தக் கைச்சாத்திடலுடன் ஆரம்பமாகிய இந்த முக்கியமான கூட்டாண்மையினைத் தொடர்வதற்காக இத்தூதரக இல்லத்தின் ஜனநாயகக் கூட்டாண்மையின் பிரதிநிதிகள் குழு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது. இந்த விஜயமானது ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸில் இலங்கைக்கான பலம் வாய்ந்ததொரு இருதரப்பு ஆதரவினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

“காங்கிரஸில் உள்ள நம் நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமான இந்த விஜயமானது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கிளைகள் முழுவதும் வலுவானதாக விளங்கும் அமெரிக்கா - இலங்கைக்கிடையிலான பலம் வாய்ந்ததொரு இணைப்பிற்கான இருதரப்பு ஆதரவினை எடுத்துக் காட்டுகின்றது” என்று இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் திரு. அத்துள் கேஷாப் கூறியுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, பிரதிநிதிகள் குழுவினர் இலங்கை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாராளுமன்ற சபாநாயகர், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகியோருடனான சந்திப்புக்களை மேற்கொள்வார்கள். இலங்கையிலுள்ள இப்பிரதிநிதிகள் குழுவானது காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தரவரிசை உறுப்பினர் டேவிட் பிரைஸ் (ஜனநாயகவாதி - வட கரோலினா), காங்கிரஸ் பெண் உறுப்பினர் குவென் மூரே (ஜனநாயகவாதி - விஸ்கொன்ஸின்), காங்கிரஸ் உறுப்பினர் அத்ரியன் ஸ்மித் (குடியரசுக் கட்சி - நெப்ரஸ்கா) மற்றும் காங்கிரஸ் உறுப்பினர் ஜெரி கொன்னொலி (ஜனநாயகவாதி - வேர்ஜிணியா)

ஆகியோர் உள்ளிட்ட ஐக்கிய அமெரிக்கத் தூதரக இல்லத்தின் ஜனநாயகக் கூட்டாண்மையின் தலைவரும் காங்கிரஸ் உறுப்பினருமான பீற்றர் றொஸ்கமின் (இல்லினாய்ஸ் குடியரசுக் கட்சி) தலைமையில் வழி நடத்தப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்கத் தூதரக இல்லத்தின் ஜனநாயகக் கூட்டாண்மை என்பது பயனுள்ள, சுதந்திரமான மற்றும் பதிலளிக்கக்கூடிய சட்டமன்ற நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஆதரவளிப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள பங்காண்மை நாடுகளுடன் இணைந்து நேரடியாகப் பணியாற்றுகின்ற அமெரிக்கத் தூதரக இல்லப் பிரதிநிதிகளின் ஆணைக்குழுவிலுள்ள இருபது உறுப்பினர்களைக் கொண்ட இருதரப்புக் கட்சிகள் சார்ந்த ஓர் அமைப்பு ஆகும். ஐக்கிய அமெரிக்கத் தூதரக இல்லத்தின் ஜனநாயகக் கூட்டாண்மை பற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்காக https://hdp.house.gov/ என்ற இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும்.

# # #